## சிறப்பு சார்பு நீதிமன்றம், (MACT) கிருஷ்ணகிரி
## **M.C.O.P No.635/2022, Date: 23.03.2026**

The Oaths Act 1969, Act No.44/1969ன் விதிமுறைகளின் படி 23.03.2026 நாளாகிய இன்று Tmt.M.Jayanthi,M.A.,M.L., சிறப்பு சார்பு நீதிபதி (MACT) அவர்கள் முன்னிலையில் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | : தினேஷ் | **வயது** | : |
| **தந்தை பெயர்** | : | **மாவட்டம்** | : |
| **வேலை** | : | **கிராமம்** | : |
| **அலைபேசி எண்.** | : | | |

ம.சா.1

முதல் விசாரணை:– (மனுதாரர் தரப்பில்)

நான் மனுவின் மனுதாரர். பிரமாண வாக்குமூலம் எனது தரப்பில் தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் உண்மை என்று உறுதியளிக்கிறேன்.

| | | |
|---|---|---|
| முதல் தகவல் அறிக்கை – போட்டோ நகல் | – | ம.சா.ஆ.1 |
| தருமபுரி அரசு மருத்துவமனையில் வழங்கிய விபத்து பதிவேடு – போட்டோ நகல் | – | ம.சா.ஆ.2 |
| நாதன் மருத்துவமனையில் வழங்கிய மருத்துவ விடுவிப்பு சான்று – அசல் | – | ம.சா.ஆ.3 |
| காப்பீட்டு சான்று – போட்டோ நகல் | – | ம.சா.ஆ.4 |
| ஆதார் அட்டை – போட்டோ நகல் | – | ம.சா.ஆ.5 |
| வங்கி சேமிப்பு புத்தகம் – போட்டோ நகல் | – | ம.சா.ஆ.6 |
| மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை – போட்டோ நகல் | – | ம.சா.ஆ.7 |
| மருத்துவமனை கட்டண ரசீதுகள் அசல் (ஆட்சேபனையுடன்) | – | ம.சா.ஆ.8 |
| காயச்சான்றிதழ் – அசல் | – | ம.சா.ஆ.9 |

மனுப்படி உத்தரவிட வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை :– (2ம் எதிர்மனுதாரர் தரப்பில்)

நான் தற்போது வேலைக்கு சென்றுவருகிறேனா என்றால் இல்லை. எனது மாத வருமானம், தொழில் செய்வதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால்

சரிதான். விபத்து சமயம் ஓட்டுநருடன் சேர்ந்து 5 பேர் பயணித்தோம். ஓட்டுநர் அருகே அண்ணாமலை அமர்ந்திந்தார் என்றால் சரிதான். அந்த வாகனத்தில் கிரானைட் கற்கள் இருந்தது. அந்த கற்கள் மேல்தான் நாங்கள் அமர்ந்து பயணித்தோம் என்றால் இல்லை. புகாரில் அவ்வாறுதான் உள்ளது என்றால் சரிதான். சரக்கு வாகனத்தில் பொருட்களின்மீது அமர்ந்து பயணிக்கக்கூடாது என்றாலும், கேபின் உள்ளேதான் பயணிக்கவேண்டும் என்றாலும், எனவே காப்பீடு விதிமீறல் மோட்டார் வாகன சட்ட விதிமீறல் உள்ளது என்றால் சரியல்ல. எனவே உள்ளதால் 1ம் எதிர்மனுதாரர்தான் எனக்கு இழப்பீடு வழங்கவேண்டும் என்றாலும், 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. பாலிசி விதிமீறலை மீறி கற்களின்மீது அமர்ந்து சென்றதால் எனக்கு 1ம் எதிர்மனுதாரர்தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து எவ்வித நஷ்டஈடும் வழங்க இயலாது என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் மருத்துவ சிகிச்சையில் பூரணமாக குணமடைந்துவிட்டது என்றாலும், எனக்கு நிரந்தர ஊனம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீட்டிற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> -இல்லை.

M JAYANTHI — Digitally signed by M JAYANTHI

சிறப்பு சார்பு நீதிபதி,
சிறப்பு சார்பு நீதிமன்றம்(MACT),
கிருஷ்ணகிரி.